"DINAMALAR"

PAGE NO: 07

DATE: 03.08.21

# புதுச்சேரி பல்கலைக் கழகத்தில் இதழியல் படிப்புக்கு இலவச பயிற்சி

**புதுச்சேரி, ஆக. 3–**

புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் புகைப்பட இதழியல் தொடர்பான இரு படிப்புகளுக்கு, இணையவழியில் இலவசமாக பயிற்சி அளிக்கப்படுகிறது.

புதுச்சேரி பல்கலைக் கழக கல்வி பல்லூடக ஆராய்ச்சி மையம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

புதுச்சேரி பல்கலைக் கழக கல்வி பல்லூடக ஆராய்ச்சி மையம் சார்பில்; இந்த கல்வியாண்டு முதல், இணைய வழியில் இரண்டு புதிய பாடப்பிரிவுகள் துவக்கப் பட்டுள்ளன. புகைப்பட இதழியல், ஊடகச் சட்டம் ஆகிய இரு பாடப்பிரிவுகளை, துணைவேந்தர் குர்மீத் சிங் காணொலியில் துவக்கி வைத்தார்.

இந்த பாடப்பிரிவுகள், மத்திய கல்வி அமைச்சகம் சார்பில் இலவசமாக நடத்தப்பட உள்ளது. இப்படிப்பில் சேர வயது வரம்பு இல்லை. இவை, 15 வார படிப்பாகும். சேர விரும்பும் மாணவர்கள், வரும் 31ம் தேதிக்குள் பெயர் பதிவு செய்து கொள்ளலாம். மேலும் விவரங்களுக்கு, பல்கலைக்கழக கல்வி பல்லூடக ஆராய்ச்சி மையத்தை தொடர்பு கொள்ளலாம்.

இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

"HINDU TAMIL"

PAGE NO: 03 DATE: 03.08.21

புதுச்சேரி மத்திய பல்கலைக்கழகத்தில்

# இணையவழியில் இலவசமாக இரு புதிய பாடப்பிரிவுகள் தொடக்கம்

■ புதுச்சேரி

புதுச்சேரி மத்திய பல்கலைக் கழகத்தில் இந்த கல்வியாண்டு முதல் இலவசமாக இணைய வழியிலான இரண்டு புதிய பாடப் பிரிவுகள் தொடங்கப்பட்டுள்ளன.

மத்திய அரசின் கல்வி அமைச்ச கத்தின் சார்பில் நடத்தப்பட உள்ள இலவச வகுப்புகளான புகைப்பட இதழியல் மற்றும் ஊடகச் சட்டம் ஆகிய இரண்டு புதிய பாடப்பிரி வுகளில் புகைப்படத் துறை மற்றும் இதழியல் துறைகளில் ஆர்வம் உள்ளவர்கள் சேர்ந்து பயன் பெறலாம். வயது வரம்பு எதுவுமில்லை.

15 வாரகால புதிய படிப்பில் புகைப்பட இதழ்கள், ஊடகச் சட்டம் மற்றும் ஊடக அறநெறிகள் முதலான பல்வேறு தலைப்புகளில் பல் கலைக்கழக பேராசிரியர்கள் முனைவர் ராதிகா கண்ணா மற்றும் முனைவர் அருள்செல்வன் ஆகியோர் வழிகாட்டுதலில் வகுப்புகள் நடத்தப்படவுள்ளன.

சுற்றுலா துறையில் ஆர்வம் உள்ளவர்கள் மற்றும் அடர்ந்த காட்டுப் பகுதிகளுக்குச் சென்று இயற்கை அழகை படமெடுக்க விரும்புவர்களுக்குத் தேவையான அனைத்துதிறன்களையும் தொழில் நுட்பம் சார்ந்து மேம்படுத்துகின்ற வகையில் புகைப்பட இதழியல் துறை படிப்பு பல்கலைக்கழக பேராசிரியர்களால் உருவாக்கப் பட்டுள்ளது.

இந்திய கலை, கலாச்சாரம் மற்றும் சமூக மாற்றத்திற்கான ஆவணப் படங்களை எடுக்க விரும்புவர்களுக்கும் சிறப்பு பயிற்சிகள் அளிக்கப்படவுள்ளன. இந்திய அரசியலமைப்பு மற்றும் ஊடகம் தொடர்பான சட்டங்கள், அறநெறிகள் போன்ற பல்வேறு பயனுள்ள பாடத்திட்டங்களும் ஊடகச் சட்டம் பாடப்பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளன.

இப்பாடப் பிரிவுகளில் சேர்ந்து பயில 1600-க்கும் மேற்பட்டவர்கள் தங்கள் விருப்பங்களை தெரிவித் துள்ளனர். இம்மாதம் 31-ம் தேதி வரை மாணவர்கள் தங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொள்ளலாம்.

இதுதொடர்பான மேலும் விவ ரங்களைப் பெற விரும்புவர்கள் பல்கலைக்கழக கல்வி பல்லூடக ஆராய்ச்சி மையத்தை (இஎம் ஆர்சி) தோடர்பு கொள்ளலாம். புதிய பாடப்பிரிவுகளை பல் கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் குர்மீத் சிங் காணொளி மூலம் நேற்று தொடங்கி வைத்தார்.

"DAILY THANTHI"

PAGE NO: 04 DATE: 03.08.21

புதுவை பல்கலைக்கழகத்தில்

# புகைப்பட இதழியல் பாடப்பிரிவு தொடக்கம்

புதுச்சேரி, ஆக.3-

புதுவை பல்கலைக்கழக கல்வி பல்லூடக ஆராய்ச்சி மையம் சார்பில் நடப்பு கல்வியாண்டு முதல் புகைப்பட இதழியல், ஊடக சட்டம் ஆகிய 2 புதிய பாடப்பிரிவுகள் தொடங்கப்பட்டு உள்ளன.

இதனை பல்கலைக்கழக துணைவேந்தர் குர்மீத்சிங் காணொலிக்காட்சி மூலம் தொடங்கி வைத்தார்.

மத்திய அரசு சார்பில் நடத்தப்பட உள்ள இலவச வகுப்புகளான புகைப்பட இதழியல் மற்றும் ஊடகச் சட்டம் ஆகிய 2 புதிய பாடப்பிரிவுகளில் புகைப்பட துறை மற்றும் இதழியல் துறைகளில் ஆர்வம் உள்ளவர்கள் சேர்ந்து பயன்பெறலாம். வயது வரம்பு இல்லை.

15 வார கால இந்த புதிய படிப்பில் புகைப்பட இதழ்கள், ஊடகச் சட்டம் மற்றும் ஊடக அறநெறிகள் முதலான பல்வேறு தலைப்புகளில் பல்கலைக்கழக பேராசிரியர்கள் ராதிகா கண்ணா, அருள் செல்வன் ஆகியோர் வழிகாட்டுதலில் வகுப்புகள் நடத்தப்பட உள்ளன.

இந்த பாடப்பிரிவுகளில் சேர்ந்து பயில விரும்புவோர் வருகிற 31-ந் தேதி வரை தங்கள் பெயர்களை பதிவு செய்து கொள்ளலாம். இது தொடர்பான விவரங்களுக்கு பல்கலைக்கழக கல்வி பல்லூடக ஆராய்ச்சி மையத்தை தொடர்பு கொள்ளலாம்.